# இந்தியத் துணைத் தூதரகம்

**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

**வடக்கு மாகாணத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வுகள்**

**ஒக்டோபர் 2, 2019**

யாழ் இந்தியத் துணைத் தூதரகமானது மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, அரியாலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, புங்குடுதீவு ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்திருந்தது.

2. காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு யாழ் இந்திய பதில் துணைத் தூதுவர் திரு ராமேஸ்வர் பக்தா பருத்தித்துறை நகரசபை தவிசாளர் மற்றும் பல காந்திய வாதிகள் மலர்மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

3. அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண அவைத்தலைவர் சீ வீ கே சிவஞானம், யாழ் மாநகரசபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் மற்றும் பல மூத்த காந்தீயவாதிகள் கலந்து கொண்டு மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தினர். பின்னர் அரியாலை காந்தி சேவா சங்கத்தின் சனசமூக நிலையத்தில் உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை நகரசபையில் இருந்து வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோவில் வரை அமைதிக்கான நடைபவனியும் அதனைத் தொடர்ந்து அக் கோவில் கோபுரத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

4. மதியம் 1 மணிக்கு முல்லைத்தீவில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து 2 மணிக்கு கிளிநொச்சியில் காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட பதில் துணைத் தூதுவர் அவர்கள் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

5. அதனைத் தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு புங்குடுதீவில் வட இலங்கை சர்வோதயமும் யாழ் இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து நடாத்திய மகாத்மா காந்தியின் பிறந்த நாள் சிறப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதோடு சர்வோதயத்தினால் நிகழ்த்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது. தூதரக அதிகாரிகள் சர்வோதய உறுப்பினர்கள் மாணவர்கள் பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

6. அத்துடன் மகாத்மா காந்தியின் பிறந்தநாள் நிகழ்வுகள் யாழ் இந்தியத் துணைத் தூதரக வளாகத்திலும் இடம்பெற்றதுடன் மிகப்பெரிய காந்தியின் உருவப்படமும் வைக்கப்பட்டது.

***02 ஒக்டோபர், 2019***
***யாழ்ப்பாணம்***